Words for Him: Expressing Affection and Love…❤️💞❤️

thelifeofmine3.wordpress.com/2024/01/01/words-for-him-expressing-affection-and-love-%E2%9D%A4%EF%B8%8F%F0%9F%92%9E%E2%9D%A4%EF%B8%8F/

January 1, 2024

நூல்: தட்டாதே திறந்திருக்கிறேன்

எனக்கே நான் யாரோவாக இருந்தபோது உனக்கு மட்டும் எப்படி சொந்தமானேன்.

–நாடன் சூர்யா

என்னவன் வர்ணிக்கும் அந்த சிறு தருணத்திர்க்காக ஏங்கி கொண்டிருக்கும் பைத்தியக்காரியும் நான்...அந்த பைத்தியக்காரி தணத்திலும் என்னவனின் அன்புக்காக ஏங்கும் ஒரு குட்டி பூனையும் கூட நான்...

-Unknown

நட்பா காதலா...!

நொடிப்பொழுதில் மறந்துவிட முடியும்... இந்த உலகத்தை, உன்னோடு கதைக்கும் பொழுது...

எத்தனை சண்டைகள் எத்தனை மோதல்கள்... சொல் !? எனினும் இன்னும் மின்னுகிறாய்... வண்ணத்துப்பூச்சியின் வாழ்விற்கு வண்ணங்கள்

என்றுமே இருப்பேன் என்பதெல்லாம்... எதார்த்த பொய்கள் என எண்ணுபவள் நான்... நிலையில்லையெனினும் நினைவில் நிரந்தரமே.... என அறிய செய்தவன் நீ... எனக்கு நீ... உனக்கு நான்... இது காதலா? என்றால் இல்லை நட்புக்குள்ளும் மலரும் காதல் ஆனால் மலர்வது எல்லாம் காதல் இல்லை...(was in this state)

INDUMATHI

இவர்களுக்கு ஏன் நம்மை இவ்வளவு பிடித்திருக்கிறது?
இத்தனை அன்புக்கும் நாம் ஏற்புடையவர்கள் தானா? என்று
உனக்கே தோன்ற வைக்கும் அளவிற்கு உறவொன்று இருந்தால்- இங்கு உன்னை விட அதிர்ஷ்டசாலி வேராறுண்டு?

-Unknown

எல்லாம் வெறுத்த பின்பும் எதோ ஒன்று ஆறுதல் தருகிறது எல்லாம் கடந்த பின்பும் எதோ ஒன்று கனவாக வருகிறது எல்லாம் முடிந்த பின்பும் எதோ ஒன்று தொடங்குகிறது எல்லாம் மறந்த பின்பும் எதோ ஒன்று நினைவுகளாய் இருக்கிறது இந்த எதோ என்பது தான் என்னை ஒவ்வொரு நாளும் கடந்து போக உதவுகிறது.

-அரிகரன்.